www.tamilarangam.net

# விடுதலைக் காளிக்கு....!

# கப்டன் தோழர் றேகன்

## பிராந்தியத் தளபதி (வன்னி)



ஈழ மக்களே!
இந்தப் போராளியை
நமது,
நாட்டில் உலாவும்
காட்டு மிருகங்கள்
கொன்று விட்டன!

துப்பாக்கி மிருகங்களின்
வெறித்தன விருந்துக்கு
பலியானோர் பட்டியலில்
மீண்டும் ஒருவன்.

இவனின்,
தொலைதூரக் கனவுகள்
தெருக் குழிகளில்
இரத்த வெள்ளமாய்
உறைந்து போயின!

வீறு நடை போட்ட
படை வீரன் ஒருவன்
பலி
எடுக்கப்பட்டுவிட்டான்!

தவிர்க்க முடியாது
"விடுதலைக் காளி"யின்
விருந்துக்கு;
இப்படிப் பல வீரர்கள்
தேவையாய்ப் போயினர்.

காளியம்மா!
**சுந்தரத்தில்**
சுவைகண்டு
சுடச்சுடக் கேட்டதற்கு
**தேவனை,**
**ஜெகனை**
சுட்டுப் படைத்தார்கள்!

மக்களே!
இவன் தன்
தேசத்தை
நேசித்ததால்
தெருவில்
வீசப்பட்டவன்!

களத்தில்
இறங்கியதால்
கம்பத்தில்
கட்டப்பட்டவன்!

களத்து
வீரர்களால்
கழுத்து
அறுக்கப்பட்டவன்!

நடத்து
போர் என்றதால்
நரபலி
எடுக்கப்பட்டவன்!

போதா தென்று
பொங்கி யெழுந்தாய்
**மனோ மாஸ்டரை**
மடியிலே போட்டார்கள்!

தலைவிரித்தாடி
மேலும் கேட்டாய்
அந்தரங்கப் பலி கொடுப்பு
அடிக்கடி செய்தார்கள்!

அதுவும் போதாதென்றாய்
இதோ,
இன்றொரு **றேகன்**
உனக்குப் படையல்!
தீர்ந்ததா உனது
இரத்தப் பசி,
தணிந்ததா உனது
குருதி வெறி;

எந்திரத் துப்பாக்கிகளுக்கு,
எண்ணெய் தடவச் சொல்;
எவனாவது ஒரு போராளியை
கொன்று படைக்கச் சொல்!
வேட்டையாடச் சொல்,
வெறியைத் தீர்க்கச் சொல்,
உருக்கொண்டெழு,
உக்கிரமாய்க் கத்து
உன் ஏவல் நாய்களுக்கு
ஆணையிடு;
ஈழத்தில்
எதிரிக் கெதிரான
படையெடுப்பு நடக்கிறதோ
இல்லையோ,
பலியெடுப்பு நடக்கட்டும்.....

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) (1985-11-28)